DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.41/2023**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ரவி | Caste: | |
| Father's Name: | காந்தி | Calling: | ஆய மேற்பார்வை அலுவலர், டாஸ்மாக் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 51 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 13.10.2025

(2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 1ம் எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் டாஸ்மாக் ஆய மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023ம் ஆண்டு பரமக்குடி வட்டாட்சியராக பணிபுரிந்தபோது பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் தனது 18.06.2023ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் பரமக்குடி வட்டம் உரப்புளி கிராமத்தை சேர்ந்த லாடசாமி மகன் அருண்குமார் மற்றும் பரமக்குடி மருதுபாண்டியர் நகர் அரசுபாண்டி மகன் அருண்குமார், மற்றும் புகார் கொடுத்ததாக சொல்லும் பரமக்குடி உரப்புளி முனியாண்டிபுரத்தை சேர்ந்த இராமகிருஷ்ணன் மகன் பாலமுருகன் என்பவருக்கும் சாதி சான்றிதழ் வழங்கும்படி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடம் அறிக்கை பெற்று எதிரிகள் அருண்குமார் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த இந்து மறவர் என்றும், புகார்தாரர் பாலமுருகன் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து தேவேந்திர குல வேளாளர் என்றும் சான்று வழங்கினேன். நான்

வழங்கிய சான்று **அ.சா.ஆ.6**. இதுசம்பந்தமாக காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.41/2023**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கோபி | Caste: | |
| Father's Name: | சுப்பிரமணி | Calling: | விவசாயம் |
| Village: | கள்ளிக்கோட்டை | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 37 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 13.10.2025

(2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 1ம் எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா கள்ளிக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். சா.ப.சா.6 குப்புசாமியை தெரியாது. அ.சா.1 பாலமுருகனை தெரியாது. அ.சா.1 கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2**. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3**. அந்த கையெழுத்துகளை நான் எப்போது எங்கு வைத்து போட்டேன் என்றால் . சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு பரமக்குடி கிருஷ்ணா தியேட்டர் அருகே சென்று கொண்டிருக்கும்போது ஒரு ஏட்டையா வந்து என்னிடம் கையெழுத்து போடும்படி கேட்டார்.நான் கேட்டதற்கு சும்மா போடும்படி கேட்டார். நானும் போட்டேன். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

போலிஸ் விசாரணையில் கடந்த 02.06.2023ம் தேதி காலை 7.00மணியளவில் நானும் பரமக்குடி சுந்தர்நகரை சேர்ந்த குப்புசாமியும் காக்கா தோப்பு ஒயின்ஷாப் அருகே நின்றுகொண்டிருக்கும்போது பரமக்குடி காவல்துணை கண்காணிப்பாளர் வந்து 01.06.2023ம் தேதி சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் குப்புசாமியும் கையெழுத்து செய்தோம் என்றும் பின்பு 08.00மணியளவில் சம்பவ இடத்தில் கிடந்த ரீப்பர் சக்கையை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் குப்புசாமியும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் கடந்த 02.06.2023ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் இருவரும் எனது சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.41/2023**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | குப்புசாமி | Caste: | |
| Father's Name: | ராஜன் | Calling: | நெசவுத்தொழில் |
| Village: | சுந்தர்நகர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 52 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 13.10.2025

(2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 1ம் எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா சுந்தர்நகரில் வசித்து வருகிறேன். அ.சா.1 பாலமுருகனை தெரியாது. அ.சா.1 கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4**. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5**. அந்த கையெழுத்துகளை நான் எப்போது எங்கு வைத்து போட்டேன் என்றால் . சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு பரமக்குடி கிருஷ்ணா தியேட்டர் அருகே சென்று கொண்டிருக்கும்போது ஒரு ஏட்டையா வந்து என்னிடம் கையெழுத்து போடும்படி கேட்டார்.நான் கேட்டதற்கு சும்மா போடும்படி கேட்டார். நானும் போட்டேன். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

போலிஸ் விசாரணையில் கடந்த 02.06.2023ம் தேதி காலை 7.00மணியளவில் நானும் பரமக்குடி கள்ளிக்கோட்டையை சேர்ந்த கோபியும் காக்கா தோப்பு ஒயின்ஷாப் அருகே நின்றுகொண்டிருக்கும்போது பரமக்குடி காவல்துணை கண்காணிப்பாளர் வந்து 01.06.2023ம் தேதி சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் கோபியும் கையெழுத்து செய்தோம் என்றும் பின்பு 08.00மணியளவில் சம்பவ இடத்தில் கிடந்த ரீப்பர் சக்கையை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் குப்புசாமியும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் கடந்த 02.06.2023ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் இருவரும் எனது சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)